# மிஹிந்தலை பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 09 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மிஹிந்தலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது பெற வேண்டியவை என உறுதிப்படுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,338,190 இற்கான நீதி மன்றத் தண்டப்பணம், கடை வாடகை மற்றும் வர்த்தக உரிமையை வாடகைக்கு கொடுத்தல் வருமானங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,300,000 இற்கான முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை முத்திரை கட்டண பெறுவனவுகளை நிலுவை வருமானக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்படாமையால் நிலுவை வருமானம் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 1990 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப் பகுதிக்கான ரூபா 296,946 இற்கான கணக்காய்வுக் கட்டணம் அட்டுறு செலவு என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்தை கணித்து கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 240,000 இற்கான டிரக்டர் நீர் பவுசர் மற்றும் 2014 ஆண்டின் போது உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 715,713 தொகை பெறுமதியான வெள்ளை இரும்பு பவுசர் என்பன மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கில் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

---------------------------------------------------------------

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்களின் மீதி மற்றும் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காணப்படும் மீதிகள் இடையே ரூபா 7,005,142 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் காணப்படும் 03 கணக்கு விடயங்களின் மீதி மற்றும் பேரேட்டு கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் இடையே ரூபா 2,262,209 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 40,888,216 இற்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் / விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 தீர்க்கப்படாத கணக்குகள்

--------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காணப்படும் 06 பெற வேண்டிய கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,202,122 இற்கான வரவு மீதியும் 06 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 46,613 இற்கான செலவு மீதியும் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் முன் கொண்டு வரப்பட்டு காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு மிகை ரூபா 3,349,918 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 4,417,021 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 889,943 இற்கான குத்தகை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------------

அதிகாரம் 203, மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 2(1) ஏற்பாடுகளுக்கு முரணாக சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் பதிவு செய்யப்படாமல் ஓட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

-------------------------------

(அ) மாகாண சபை ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 75,000 தொகை ஒன்று மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி திணைக்களத்தினால் சபைக்கு வழங்கியிருந்த போதிலும் குறிப்பிட்ட செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 985,483 தொகைக்கான பாதைகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஒன்று 2014 அக்டோபர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் 2015 ஜூலை வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அதற்கான ஒப்பந்தக்காரருக்கு ரூபா 398,166 தொகை ஒன்று செலுத்தப்பட்டுள்ளது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு